செ.வெ.எண் : நாள் : 09.09.16

விருதுநகர் மாவட்டம்

18 வயது பூர்த்தி அடைந்த அனைத்து கல்லூரி மாணவ, மாணவிகளும் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரை சேர்த்து ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும் - மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள்

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் உள்ள தேவாங்கர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 18 வயது பூர்த்தி அடைந்த கல்லூரி மாணவ மாணவியர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

கல்லூரிகளில் பயிலும் 18 வயது பூர்த்தியடைந்த மாணவ, மாணவிகள் அனைவரும் வாக்குரிமையை முழுமயைாக பயன்படுத்த வேண்டும். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்காதவர்கள் **01.09.2016 முதல் 30.09.2016க்குள்** சம்பந்தப்பட்ட வாக்கு சாவடியின் நிர்ணயிக்கப்பட்ட அலுவலரிடமோ அல்லது வாக்கு சாவடி நிலை அலுவலரிடமோ அல்லது சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்/ நகராட்சி ஆணையரிடமோ அல்லது வருவாய் கோட்டாட்சியரிடமோ விண்ணப்பங்களை வழங்கி கண்டிப்பாக தங்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்க்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்கள் 10.09.2016 மற்றும் 24.09.2016 ஆகிய நாட்களில் அந்தந்த ஊராட்சிகளில் நடைபெறும் சிறப்பு கிராம சபை கூட்டங்களில் வாசிக்கப்படும். அதில் தங்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை தெரிந்து கொள்ளலாம். மேலும் 1.1.2017 அன்று 18 வயது பூர்த்தி அடைபவர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு விண்ணப்பங்களை வழங்கலாம்.

இது தவிர **11.09.2016 (ஞாயிறு) மற்றும் 25.09.2016 (ஞாயிறு)** ஆகிய விடுமுறை நாட்களில் அந்தந்த வாக்குசாவடி மையங்களில் **சிறப்பு முகாம்கள்** நடத்தப்பட்டு மனுக்கள் பெறப்படும். தேர்தலில் மாணவர்களின் பங்கு மிக முக்கியமானது. எனவேதான் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளிலும் ஒரு தூதுவர் நியமிக்கப்பட்டு வாக்களிப்பதின் அவசியம் குறித்து எடுத்துரைத்து, நியமிக்கப்பட்ட நோடல் அலுவலரிடம் 18 வயது பூர்த்தி அடைந்த அனைத்து மாணவ, மாணவிகளும் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை மொத்தமாக வழங்கி பெயர்களை சேர்க்கலாம். விண்ணப்பங்களை நிரப்பும்போது கவனத்துடன் அனைத்து கலங்களையும் நிரப்ப வேண்டும். எங்கு குடியிருக்கிறோர்களோ அங்குள்ள வாக்காளர் பட்டியலில்தான் உங்களது பெயரை சேர்க்க முடியும்.

இதுமட்டுமல்லாமல் **www.elections.tn.gov.in** என்ற இணையதளத்தில் வாயிலாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க/நீக்க/ திருத்தம் செய்து கொள்ளலாம். இணையதளத்தில் பதிவு செய்தவர்களுக்கும் மற்றும் இதர இடங்களில் விண்ணப்பங்களை அளித்தவர்களுக்கும் ஒப்புகை எண் ஒன்று தரப்படும். அந்த எண்ணின் மூலம் உங்களது விண்ணப்பத்தின் நிலையை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

எனவே 18 வயது பூர்த்தி அடைந்த தகுதியான அனைவரும் வாக்களித்தால் தான் வலுவான ஜனநாயகத்தை உருவாக்க முடியும் என்பதால், அனைவரும் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் பெயர் இருப்பதை உறுதி செய்து ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் திருமதி.செல்வி, அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் திருமதி.சீதாலட்சுமி, வட்டாட்சியர்(தேர்தல்) திரு.ஸ்ரீதர், தேவாங்கர் கல்லூரி முதல்வர், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்